

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7, 8 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு.

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12/11/2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | 8 | போடி | ஸ்ரீ வான்மதி மஹால், போடி – முந்தல் பிரதான சாலை, போடிநாயக்கனூர், தேனி. |
| | மாலை 4.00 மணி | | பெரியகுளம் | என்.ஆர்.டி. திருமண மஹால், என்.ஆர்.டி.சாலை, தேனி. |
| 13/11/2024 புதன்கிழமை | காலை 9.00 மணி | 7 | நாகப்பட்டினம் | ஏ.எஸ்.ஏ.அம்பிகாபதி திருமண மண்டபம், பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | | கீழ்வேளூர் | எம்.வி.கே. திருமண மண்டபம், திருக்குவளை, நாகப்பட்டினம். |
| | காலை 9.00 மணி | 8 | ஆண்டிப்பட்டி | ஸ்ரீ பாண்டியன் மீனாட்சி திருமண மண்டபம், மின் வாரிய அலுவலகம் அருகில், எஸ்.எஸ்.புரம், ஆண்டிப்பட்டி, தேனி. |
| | மாலை 4.00 மணி | | கம்பம் | கம்பம் நா.நடராஜன் நினைவுத் திருமண மண்டபம், கம்பம், தேனி. |
| 14/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 8 | தென்காசி | ஸ்ரீ சாரதாம்பா திருமண மண்டபம், இலஞ்சி, தென்காசி மாவட்டம். |
| | மாலை 4.00 மணி | | கடையநல்லூர் | எஸ்.எஸ்.கிராண்ட் மஹால், அச்சம்பட்டி பேருந்து நிலையம் அருகில், கடையநல்லூர் – தென்காசி பிரதான சாலை, தென்காசி மாவட்டம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில் இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (10.11.2024) திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மூத்த திரைக் கலைஞர்

# டெல்லிகணேஷ் மறைவு திரையுலகிற்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ. 12 -**

**"மூத்த திரைக்கலைஞர் டெல்லி கணேஷ் அவர்களின் மறைவு திரையுலகிற்குப் பேரிழப்பு" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**மூத்த திரைக்கலைஞர் டெல்லி' கணேஷ் அவர்கள் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**



மூத்த திரைக்கலைஞர் 'டெல்லி' கணேஷ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நாடகத்தில் இருந்து திரைத்துறைக்கு வந்து, தன்னுடைய அடையாளத்தை அழுத்தமாகப் பதித்தவர் டெல்லி கணேஷ் அவர்கள்.

400க்கும் மேற்பட்ட திரைப் படங்களில் நடித்துள்ள அவரது நகைச்சுவைக் காட்சிகள் இன்றளவும் மக்களால் மீண்டும் மீண்டும் பார்க்கப்படும் அளவுக்குச் சிறப்பான நடிப்பை வெளிப் படுத்தக் கூடியவராக அவர் திகழ்ந்தார்.

வெள்ளித்திரை மட்டுமல்லாது சின்னத்திரையிலும் டெல்லி கணேஷ் அவர்கள் பல தொடர்களில் நடித்து முத்திரை பதித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்தில் உருவான 'இளைஞன்' திரைப்படத்திலும் டெல்லி கணேஷ் அவர்கள் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் திரைத்துறை வரலாற்றில் நீண்டகாலம் நிலைத்து நிற்கும் பல நகைச்சுவை, குணச்சித்திரப் பாத்திரங்களில் நடித்தவரான டெல்லி கணேஷ் அவர்களின் மறைவு திரையுலகிற்குப் பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும், திரைத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### புதுக்கோட்டையில்

# தொழில் முனைவோர்களுக்கான மாதாந்திர குறைதீர்க்கும் கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை. நவ 12-

புதுக்கோட்டை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில், தொழில் முனைவோர்களுக்கான மாதாந்திர குறை தீர்க்கும் கூட்டம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா முன்னிலையில் 08.11.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில் முனைவோர்களை ஊக்குவித்திடும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில், குறை தீர்க்கும் முகாம்கள் நடத்துதல், தொழில் நிறுவனங்களை மேம்படுத்துதல், நிறுவனங்கள் அமைப்பதற்கான இட வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தொழில் முனைவோர்களுக்கான மாதாந்திர குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 25 தொழில் முனைவோர்கள் பங்கு பெற்றனர். இந்த வளாகத்தில் 101 நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது 70 நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள நிறுவனங்களும் செயல்படும் வகையில் நடவடிக்கைகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு

மேலும் இந்த குறைதீர்க்கும் கூட்டத்தில், இந்நிறுவனங்களுக்கு தேவையான, மின்வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கைகளின் மீது உரிய பரிசீலனை செய்து, அதனை நிறைவேற்றிட தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இது போன்ற நடவடிக்கைகளை, தொழில் முனைவோர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது வாழ்வினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா ,

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, பொது மேலாளர் (சிப்காட்) வி.ஆர்.வீரபத்திரன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் (கந்தர்வக்கோட்டை) கவிச்சுடர் இராசு.கவிதைப்பித்தன், திட்ட அலுவலர் அ.சூரீஜ் பாபு மற்றும் அரு.வீரமணி, எம்.எம்.பாலு, தொழில் முனைவோர்கள்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### 'இந்து தமிழ் திசை'

# செய்தியாளர் கல்யாண சுந்தரம் மறைவு!

## செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, நவ.12

செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

'இந்து தமிழ் திசை' நாளிதழ் நிறுவனத்தில் திருச்சி மாவட்ட தலைமை நிருபராக பணியாற்றி வந்த ச. கல்யாண சுந்தரம் அவர்கள், உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் (10.11.2024) உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

ஊடகத் துறையில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய கல்யாண சுந்தரம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இந்து தமிழ் திசை நாளிதழ் நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, மறைந்த நிருபர் கல்யாண சுந்தரம் குடும்பத்திற்கு பத்திரிகையாளர் நல வாரியத்தின் மூலம் உரிய நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் மு. பெ. சாமிநாதன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் வடக்கு ஒன்றியம் மற்றும் இலுப்பூர் பேரூர் கழக பாக முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட பொருளாளர் புதுக்கோட்டை துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து , இலுப்பூர் பேரூர் செயலாளர் வை.விஜயக்குமார் ஆகியோர் முன்னிலையில் இலுப்பூர் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக மருத்துவரணி துணை செயலாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, பாக முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.செந்தில்குமார், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் அரு.வடிவேல், மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றனர்.



தி.மு.கழக செய்தித் தொடர்பு துணைச்செயலாளர் கோவை செல்வராஜ் அவர்களின் மறைவையொட்டி,அவரது இல்லத்திற்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ. ரவி,மாவட்ட துனைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், ஜெயந்தி, தலைமைசெயற்குழு உறுப்பினர் சோமு(எ)சந்தோஷ் வடக்கு மாவட்ட பொருளாளர் ரஹ்மான், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு, கோபிநாத், சிவராமன், சந்தானபாண்டியன், குமரேசன், குட்லி ராஜேஷ்குமார், தமிழ்மணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.